**பெந்தோட்டை பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மாரச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 நவெம்பர் 16 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியான அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெந்தோட்டை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

கணக்கீட்டின்போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிலுத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட 10 பலநோக்கு நடமாடும் கூடுகள் மற்றும் ரூபா 52,450 கிரயமுடைய 04 பொருட்களது பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு வணங்கவேண்டிய ரூபா 4,467,185 பங்களிப்பானது கணக்கிலிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய ரூபா 129,007 நிலையான வைப்பு வட்டி வருவாயைக் பெறவேண்டிய வருவாயாகக் கணக்கிலிடாது திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் முன்பள்ளி ஒன்றிற்கு உபகரணங்களை வழங்குவதற்குச் செலவாகிய ரூபா 13,200 வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் உத்தியோகத்தர்களதும் ஊழியர்களது சம்பளமற்ற விடுதலை நாட்கள் 165½ க்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 64,662 கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 5,983,250 கூட்டுத் தொகையுடைய 04 கணக்கீட்ட விடய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய உப பதிவேடுகள் மற்றுமு் அறிக்கைகளது மீதிகளுக்கிடையே ரூபா 142,044 கூட்டுத் தொகை வித்தியாசம் நிலவியது.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

2011 முதல் தொடர்ந்துவரும் ரூபா 2,666,539 கூட்டுத் தொகையுடைய 08 வேலைக் கடன்பட்டோர் மீதிகள், 2001 முதல் தொடர்ந்துவரும் ரூபா 3,041,036 கூட்டுத் தொகையுடைய முத்திரைக் கட்டணம், 1993 முதல் தொடர்ந்து வரும் 15 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 159,278 சாதாரண முற்பணம் என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.5 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

1991 முதல் மாற்றமில்லாது முன்கொண்டுவரப்படும் ரூபா 4,457,981 கூட்டுத் தொகையுடைய 17 கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 116,438,448 கூட்டுத்தொகையுடைய காணியும் கட்டிடங்களும், இயந்திரங்களும் இயந்திர சாதனங்களும், மோட்டார் வாகனங்களும் கைவண்டிகளும், தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் நூலகப் புத்தகங்கள் சம்பந்தமான நாளதுவரையாக்கப்பட்ட, பிரிவுவாரியான, நிலையான சொத்துப் பதிவேடுகள், ரூபா 1,368,902 பெறுமதியான கையிருப்புத் தொகை சம்பந்தமான கையிருப்புப் பதிவேடும் ரூபா 12,824,846 கூட்டுத் தொகையுடைய ஊழியர் கடன் மற்றும் திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களுக்கான காலப்பகுப்பாய்வு போன்றன சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் தீருப்திகரமாக பரிசீலிக்க முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 8,752,987 கூட்டுத்தொகையுடைய 13 வைப்பு மீதிகள் தொடர்பாக இலங்கை குடியரசின் 570 ஆம் 571 (1) (2) ஆம் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதிகள் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 12,950,972 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா ,445,260 ஆகும் இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 6,505,772 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மீண்டுவரும் செலவினம் 07 சதவீதக் குறைவைக் காட்டியபோதும் மீண்டுவரும் வரும் வருவாயின் 80 சதவீதமான மீண்டுவரும் செலவினம் காணப்பட்டமையால் வருவாய்க்கு நிகராகச் செலவினம் கூடிய மட்டத்திலிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய 2 ஆண்டுகளினதும் வருவாய்களை உதவி, சுயஉற்கத்தி வருமானம் மற்றும் மீண்டுவரும் செலவினம் தொடர்பான விபரம் வருமாறு.

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருவாய் | வருவாய் உதவித் தொகை | சுய உற்பத்தி வருவாய் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 66,450,443 | 32,265,112 | 34,185,331 | 53,499,471 | 19,314,140 |
| 2014 | 49,126,583 | 19,812,244 | 29,314,339 | 42,681,382 | 13,367,043 |
| 2013 | 44,422,879 | 15,036,686 | 29,386,191 | 38,962,953 | 9,576,762 |

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிலும் முன்னைய இரு ஆண்டுகளிலும் வருவாய் அதிகரித்ததைப் போன்றே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது சுயஉற்பத்தி வருவாய் அதிகரித்திருந்தது.

(ii) சபையின் மீண்டுவரும் செலவினம் தொடர்ந்து அதிகரித்தவாறிருந்தது. அதனைக் கருத்திற்கொண்டு செலவைக் கட்டுப்படுத்துவதற்குச் சபை கவனம் செலுத்தவில்லை.

(iii) சபையின் சுய உற்பத்தி வருவாய் அதிகரித்து சகல ஆண்டுகளிலும் மீண்டுவரும் செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தபோதும், வருவாய் அதிகரிப்பில் சபை கவனம் செலுத்தவில்லை.

(iv) வருவாய்க்கான உதவி இல்லாதவிடத்து சபையின் வருவாய் மூலம் மீண்டுவரும் செலவினத்தை ஈடு செய்ய முடியாது எனத் தோன்றியது.

(v) மேற்படி (i) முதல் (iv) வரையான பந்திகளின் பிரகாரம் வருவாயை அதிகரிப்பதற்கு பை கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிடில் சபையின் நலிவான நிதி நிலைமை காரணமாக அதன் தொடர்ச்சி கேள்விக் குறியாக அமையக்கூடும்.

(இ) நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மீண்டும்வரும் செலவினத்தையும் வருவாயையும் ஒப்பிடுகையில் 04 நிகழ்ச்சித்திட்டங்களில் வருவாயை குறைந்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் வரவு, செலவுத் திட்டத்தின் படி மூலதன வருவாயாக ரூபா 9,500,000 மற்றும் மூலதனச் செலவினமாக ரூபா 13,000,000 மதிப்பிடப்பட்ட போதும், சபையின் சுயவருவாயில் 30 சதவீதம் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வருவாயிலும் கூடிய செலவினத்திற்கு நிதி ஈட்டும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 தீர்வையும் வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருந்த நிலுவை ரூபா 3,420,941 நிலுவை மற்றும் விலைப்பட்டியலிடப்பட்ட ரூபா 8,243,766 என்பவற்றில் 69 சதவீதம் ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் தீர்வை வரி நிலுவை ரூபா 3,561,119

ஆகவிருந்தது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3.2 ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்து ரூபா 132,114 நிலுவை மற்றும் விலைப்பட்டியல் தொகை அடங்கலாக ரூபா 145,615 அறவிடப்படவேண்டியிருந்தது. எனினும், ஆண்டின்போது ரூபா 3,589 அறவிடப்பட்டிருந்தது. அது குறைந்த சதவீதமான 2 ஆகும். நிலுவை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3.2 குத்தகை வாடகை**

மீளாய்வாண்டு ஆரம்பத்திலிருந்து ரூபா 74,697 நிலுவை மற்றும் விலைப்பட்டியல் தொகையான ரூபா 436,857 என்பவற்றில் 88 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் உள்ளவாறு மேலும் ரூபா 60,049 அறவிடப்படவேண்டியிருந்தது. நிலுவை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்து ரூபா 74,625 நிலுவை மற்றும் விலைப்பட்டியல் தொகையில் 94 சதவீதம் ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியிலிருந்து நிலுவையை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(4) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளிடமிருந்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தண்டப்பணமாக ருபா 53,832 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 8,474,283 என்பன அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பதவியணி முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 02 வெற்றிடங்களும் 16 மேலதிகமும் இருந்ததுடன், வெற்றிடங்களை நிரப்புவதைப் போன்றே மேலதிக பதவியணியை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(ஆ) பொருட் கணிப்பு

மீளாய்வாண்டு முடிவின் பொருட்கணிப்பு அறிக்கைப் பிரகாரம் பொருட்களது கையிருப்பில் உண்மையாகவெ இருக்கும் பொருட்களாக உறுதி செய்யப்பட முடியாத ரூபா 70,005 கிரயமுடைய 314 கூறுகளைப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) ஊழியர் கடன்

மீளாய்வாண்டு முடிவில் ரூபா 3,909,053 ஆகவிருந்த ஊழியர் கடன் மீதியில் ஓய்வுபெற்ற சேவை விலகிய, உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய

ரூபா 91,624 கடன் மீதி உள்ளடங்கியிருந்ததுடன் அம் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சகல தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கும் ஏற்புடமைச் சான்றிதழ் பெறப்பட வேண்டும் அவ்வாறு பெறப்படாது போயின் நாளொன்றிற்கு ரூபா 50 தண்டப்பணம் அறவிடப்படவேண்டும். மீளாய்வாண்டின்போது பயன்படுத்திய 08 கோபுரங்களுக்கு ஏற்புடமைச் சான்றிதழும் தண்டப்பணமுமாக ரூபா 49,000 அறவிடப்படவில்லை.

(ஆ) நிரந்தர பதவியணியினரின் சம்பளம் மாத்திரமே உள்ளூராட்சி ஆணையாளரால் மீள நிரப்பப்படுவதால் சபை ஆட்சேர்த்த ஊழியர்களது சம்பளமும் படியும் வழங்கப்படுவதற்கு சபை வருவாயில் ரூபா 1,752,265 செலவிடப்பட வேண்டியிருந்தது.

### 3.3 கழிவு முகாமைத்துவம்

கழிவு அகற்றலுக்கு சபைக்கு அண்மையில் பிரதான வீதிக்கு அருகே உள்ள சபைக்குரிய விளையாட்டு மைதானம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அக்கழிவுகள் பிரித்து ஒதுக்கப்படவோ அல்லது மீள் சுழற்சிப்படுத்தப்படவோ இல்லை. அகற்றப்படும் கழிவுநிலை மூடாது விட்டமையால் பிரதேசத்தில் துர்நாற்றம் நிலவியதுடன் சூழலுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 2016 பெப்ரவரி 08 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையில் தெரியவந்தது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வரவு, செலவுதிட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் வரவு, செலவுத்திட்டத்தில் உள்ளடக்கிய 02 செலவின விடயங்களின் மொத்த நீயேற்பாடாகிய ரூபா 954,025 வேறு 05 செலவின விடயங்களது வரம்பிலும் கூடிய ரூபா 5,603.995 செலவினம் 02 வருவாய் விடயங்களில் எய்தப்பெறாத ரூபா 20,507,374 வருவாயும், வேறு 05 வருவாய் விடயங்களில் இலக்கிலும் கூடிய ரூபா 2,648,727 வருவாயும் நிலவியதால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான வருவாயும் நிலவியதால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ/வே இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை. எவ்வாறாயினும், சபை நியமித்திருந்த உள்ளகக் கணக்காய்வாளருக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 422,847 சம்பளமும் படியுமாக வழங்கப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் DMA/2009(i) இன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையிலிருந்து விலை மதிப்பிடப்படாத 04 வாகனங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத ரூபா 1,540,000 கிரயமுடைய 2 வாகனங்கள் என்பன 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் பழுதுபார்க்கப்பட்டுப் பயன்படுத்தப்படுவதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சால் வழங்கப்பட்ட டிரக்டரில் பொருத்தப்பட்ட கலி பவுசர் மற்றும் டிறெய்லர் பயன்படுத்தப்படாது சபை வளாகத்தில் தரிப்பிடத்தில் இருந்ததால் பழுதுபார்க்கப்பட முடியாத நிலையில் இருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழே விபரிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டம்
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) நொத்து முகாமைத்துவம்
(ஈ) மனிதவளமுகாமைத்துவம்